18 ஆம் ஆண்டில் கேட்டலிஸ்ட்

Entering the 18th year in CREATING AWARENESS

CATALYST™
Creating Awareness
CATALYST
PUBLIC RELATIONS
PVT. LTD.
# 3, 'D' Block, II Floor
Gemini Parsn Apartments
599, Anna Salai, Chennai - 600 006
Ph : 2822 0003 / 7 / 8 / 6539 0055
Fax : 2825 2806
Web : www.catalystpr.in

ஜூலை 2014

# எண்ணம் திரளுது கனவில்... வண்ணம் திரளுது நினைவில்!

நமது கேட்டலிஸ்ட் பப்ளிக் ரிலேஷன்ஸ் நிறுவனம், 18–ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இத்தருணத்தில், இதுவரை நமது வளர்ச்சிக்கு உறுதுணையாகத் திகழ்ந்த உங்களுக்கு நமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவிப்பதே இம்மடலின் நோக்கம்.

பிரஸ் மீட் நடத்துதல், பிரஸ் ரிலீஸ் விநியோகித்தல் போன்றவற்றின் மூலம் ஒரு நிறுவனத்திற்கு மீடியாக்களில் செய்திகளைப் பெற்றுத் தரக்கூடிய சேவையினை, கடந்த 17 ஆண்டுகளாக நாம் செய்து வருகிறோம். ஏறக்குறைய 500 வாடிக்கையாளர்களுக்கு, 2000 முறைக்கும் மேல், சென்னை, பெங்களூரு, ஐதராபாத், கொச்சி, கோவை, திருச்சி, மதுரை ஆகிய நகரங்களில் இச்சேவைகளைச் செய்து, தென்னிந்தியாவின் முன்னணி நிறுவனமாக நாம் உயர்ந்திருக்கிறோம்.

இந்த நிறுவனத்தை 1997–ஆம் ஆண்டில் நாம் மிகச் சிறிய அளவில் தொடங்கியபோது, நமக்குள் தன்னம்பிக்கையை ஊட்டி, திசை காட்டியாக விளங்கி, நம்மை உற்சாகப்படுத்தியது ஒரு **'பென்சில்' கதை**தான். ஆச்சரியமாக இருக்கிறதா?

ஆம்! திரு. பாலோ கொயல்ஹோ (Paulo Coelho) என்பவர் எழுதிய 'பென்சில் கற்றுத் தந்த ஐந்து பாடங்கள்' என்ற கட்டுரைதான் நம் தொடர் வளர்ச்சிக்கு உதவியது. இதோ... அந்த வெற்றி விதைகளை உங்கள் இதயங்களில் விதைத்து, விளைச்சலைப் பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

1. *உள்ளீடு முக்கியம்:* பென்சிலின் வெளிப்புறப் பகுதியான மரக்குச்சியைவிட, உள் பகுதியான கிராஃபைட்தான் அதன் தரத்தை நிர்ணயிக்கிறது. அதுபோல, நமது புற அழகைவிட அறிவு, அன்பு, ஆற்றல் போன்ற அக அழகுதான் நமது வெற்றியை நிர்ணயிக்கிறது.

2. *தவறுகளை அழித்தல்:* தவறாக எழுதியவற்றை அழித்துவிட்டு மீண்டும் சரியாக எழுத பென்சில் அனுமதிக்கும். அதுபோல, நாமும் செய்த தவறுகளுக்காக குற்ற உணர்வோடு ஒதுங்கி விடாமல், அவற்றைத் திருத்திக் கொண்டு தொடர்ந்து பயணிக்க வேண்டும்.

3. *செதுக்கிக் கொள்ளுதல்:* பென்சிலைப் பிடித்து எழுதுகையில், அவ்வப்போது அதனைக் கூர்மையாக்கிக் கொள்ள வேண்டும். அதனால், பென்சிலின் உடம்பில் வலியும், வேதனையும் ஏற்பட்டாலும்கூட, அழகான எழுத்துக்களை அது தருமல்லவா? அதுபோல் நாமும் அவ்வப்போது நம்மைச் செதுக்கிக் கொண்டு பிறருக்குப் பயன் தரும் வகையில் வாழ வேண்டும்.

4. *மதிப்புயரச் செய்தல்:* பென்சிலைக் கொண்டு எழுதும் போது, வெற்றுத்தாள் கூட பொருள் பொதிந்த ஒரு தகவல் பெட்டகமாக ஆகிவிடுகிறது. அதுபோல், எந்தவொரு மதிப்புமில்லாத பொருளையும் கூட மதிப்புடையதாக்க நம்மால் முடியும்.

5. *வழிகாட்டிகள் அவசியம்:* ஒரு பென்சிலைக் கொண்டு மகத்தான காவியத்தைக் கூட படைக்கலாம். ஆனால் அதற்காக 'தான்'தான் பெரியவன் என்ற ஆணவத்துடன் அது தனித்து இயங்க முடியாது. தன்னைவிட ஆற்றல் உள்ளவரை இயக்க அது அனுமதிக்க வேண்டும். அதுபோல் நாமும் நம்மைவிட அறிவில் சிறந்தவர்களின் வழிகாட்டுதலுடன் இயங்கினால் வாழ்வில் முன்னேற முடியும்.

[திருப்புக]

ஆம் நண்பர்களே! நமது உள்ளீட்டை உணர்ந்து, தவறுகளைத் திருத்தி, நம்மைச் செதுக்கிக் கொண்டு, பிறரது மதிப்பை உயர்த்த, அறிவில் சிறந்தவர்களின் வழிகாட்டுதலோடு வாழ வேண்டும் என்பதை பென்சில் நமக்குக் கற்றுத் தந்தது.

நமது கேட்டலிஸ்ட் நிறுவனம், மக்கள் தொடர்புச் சேவையில் மட்டுமல்லாது, 'நியூஸ் டிராக்கிங்' என்கிற சேவையிலும் ஈடுபட்டு வருகிறது. எஜூகேஷன், ரியல் எஸ்டேட், ஜூவல்லரி ஆகிய துறைகள் சார்ந்த செய்திகளை, நாள்தோறும் நாளேடுகளில் இருந்து திரட்டி, அவற்றை அத்துறை சார்ந்த வாடிக்கையாளர் நிறுவனங்களுக்கு அனுப்பி, அவர்களது சிந்தனையைத் தூண்டி வர்த்தகம் செழிக்க உதவுவதே இந்தச் சேவையின் நோக்கம். தமிழகத்தில் இத்தகைய புதுமையான சேவையை வழங்குவது நமது கேட்டலிஸ்ட் மட்டும்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

நமது இந்த மாபெரும் வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக விளங்கும் உங்களுக்கு இத்தருணத்தில் எங்களது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறோம். உங்களைப் போன்றோர் அடித்தளமாய் இருப்பதால்தான் எங்களால் ஒரு கோபுரமாய் உயர முடிந்திருக்கிறது. நாங்கள் இன்னும் உயர்ந்து... உயர்ந்து... விண்ணைத் தொட விரும்புகிறோம். ஆணிவேராய் நீங்கள் இருக்கையில், எதுவும் சாத்தியம்தான்!

**இதோ... கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிர்க்க... எங்கள் பயணம் தொடர்கிறது... உங்கள் கைகளைப் பற்றியவாறே!**

***தோழமையுடன்...***

| | | |
|---|---|---|
| **இராம்குமார் சிங்காரம்**<br>**(Director)** | **இராம. வள்ளியம்மை**<br>**(Director)** | **சி. சுகுமார்**<br>**(Director - News Tracking)** |
| **அ. மதிவாணன்**<br>**(Consultant - Tamil Content)** | **கே.பி. அமர்நாத்**<br>**(Sr. Executive - Client Relations)** | **வி. ஸ்ரீவித்யா**<br>**(Sr. Executive - Client Relations)** |
| **எஸ். ஸ்ரீதேவி கிருபா**<br>**(Head - Content Development)** | **ஆர். ஜோதி லக்ஷ்மி**<br>**(Head - Associate Accounts)** | **ஐ. கிஷோர் ஃபெலிக்ஸ்**<br>**(Executive - Client Relations)** |
| **வி. பால் பிரிட்டோ**<br>**(Head - Logistics)** | **சி. ராஜசேகரன்**<br>**(Executive - Logistics)** | **எல். சுப்பிரமணியன்**<br>**(Executive - Logistics)** |
| **என். அரசுமணி**<br>**(Executive - Logistics)** | **பி. எபினேசர்**<br>**(Head - Admin)** | **எம். லீலாவதி**<br>**(Executive - Admin)** |
| **ஏ. ஹாலிதா**<br>**(Manager - Accounts)** | **ஆர். ஜாஸ்மின்**<br>**(Manager - HR & Internal Audit)** | **ஆ. அருள் மணி**<br>**(Head - News Tracking)** |